# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்:-

திரு.சு.சங்கரமூர்த்தி,B.E.,
இணை இயக்குநர்/உதவி இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.5, கணபதி நகர், 2-ஆம் தெரு,
மருத்துவக்கல்லூரி சாலை,
தஞ்சாவூர் - 613007.
மின்அஞ்சல்-ddtjrregion@gmail.com

பெறுநர்:

செயல் அலுவலர்,
திருநாகேஸ்வரம் பேரூராட்சி
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

ந.க.எண்:**1227/2020**தமா2 நாள்:**16.6.2021**

அய்யா,

பொருள்: **மனைப்பிரிவு - தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சி, அணக்குடி திருநாகேஸ்வரம் கிராமம், நி.அ.எண்:130/3-ல் அமைந்துள்ள 39,826.80 ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி/இசைவு - ஒப்புதல் வழங்குதல் - குறித்து**

பார்வை:
1) மனுதாரர் திரு.K.வெங்கடேசன் என்பவரின் விண்ணப்பம் நாள்: 07.07.2020
2) நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்: **1227/2020** தம2 நாள்: 08.07.2020
3) நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:**19799/2020**/போ நாள்:24.12.2020
4) திரு.K.வெங்கடேசன் என்பவரின் விண்ணப்பம் நாள்:03.05.2021
5)அரசாணை எண்:138 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:04.06.2004
6) அரசாணை எண்:79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:04.06.2017
7) அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020
8) அரசாணை எண்:141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(**UD4(3)**) நாள்:23.9.2020
9) அரசாணை எண்:181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(**UD4(1)**) நாள்:09.12.2020
10)அரசு கடிதம் எண்:**19113**/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:30.8.2017
12)நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:**13686/2017/LA1** நாள்:08.09.2017
13)செயல் அலுவலர், திருநாகேஸ்வரம் பேரூராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.**371/2020** நாள்.16.04.2021
14)உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம், கும்பகோணம் அவர்களின் கடிதம் க.எண்.உ.செபொ/தெ1/கும்ப/கோ/த.எண். நாள்.16.11.2020

......

பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு துணை

..2..

S. Shanthi

இயக்குனர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் கடிதம் நாள்: 08.07.2020 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 13-ல் சுட்டிய செயல் அலுவலர், திருநாகேஸ்வரம் பேரூராட்சி அவர்களின் கடிதம் மூலம் சாலை, மூலைமுடக்குகள், மற்றும் பொது ஒதுக்கீடு உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திரம் எண்:2674/2020 நாள்:05.11.2021-ல் மற்றும் பார்வை 14-ல் சுட்டிய உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம், கும்பகோணம் அவர்களின் கடிதம் மூலம் மின்சார வாரியத்திற்கு பொது ஒதுக்கீடு தானமாக தானபத்திரம் எண்:2669/2020 நாள்:05.11.2020-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ (தமா) எண்:08/2021-என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3) மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திர பதிவு அலுவலகத்திற்கும், நில அளவை துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) பார்வை 6-இல் கண்ட அரசாணை விதி எண்:9-ல் நகர் ஊரமைப்பு இயக்குநரிடமிருந்து செய்யக் கருதியுள்ள மேம்பாடு குறித்து முன் அனுமதி பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச்சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து அதனை வசூலித்து அரசு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைத்து செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதியளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து மேற்படி தொகையினை பெற்றுக்கொண்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**Land Use Conversion Charges:**

**0217 – Urban Development – 60 Other Urban Development Schemes – 800 other receipts - AS Receipts under Land Use conversion charges - 27 Non-Taxation fees - 09 collections.**
**DPC:0217 60 800 AS 2790.**

6) செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

1. **(a) பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்:47(11)-ன் படியும்** மாநகராட்சி/நகராட்சி **பகுதி எனில் "Collceting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants".After collecting the necessary fees the final layout sketch,permit of planning authority along with approved of Local Body shall be issued to the applicant (s)directly.**



S. Shanthi

(b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதியனில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with approved of Local Body shall be issued to the applicant(s) directly, only after ensuring that the applicant

lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body.

2. (EWS)பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனைஒப்புதல் வழங்கப்பட்ட 3வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3.பார்வை 9 மற்றும் 10-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களின் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamilnadu Government in G.O.Ms.No.112 Housing and Urban Development Department dated. 22.6.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6.பார்வை-5 மற்றும் 8-ல் காண் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி ரூ.7,000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) உரிய கணக்கு தலைப்பில் 03.05.2021 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

இணை இயக்குநர்/உதவி இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(2 தொகுப்பு)

நகல்:
1.திரு. K.வெங்கடேசன்,
எண்.153, குடியான தெரு,
சன்னாபுரம், திருநாகேஸ்வரம்,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

2.இருப்பு கோப்பு — வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1

3.கோப்பு — வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1

திருநாகேஸ்வரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள் பிறப்பிப்பவர் : திரு. வி.சிவலிங்கம் பி.எஸ்.சி., பி.எட்.,

ந.க.எண்: 371/2020 நாள்:24.08.2021

பொருள் : மனைப்பிரிவு – பேரூராட்சி நிர்வாகம் – தஞ்சாவூர் மாவட்டம் – திருநாகேஸ்வரம் பேரூராட்சி – பேரூராட்சி பகுதியில் புல எண். 130/3 –ல் 39826.80-ல் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் அமையும் மனை எண். 1 முதல் 20 வரையுள்ள மனைகளுக்கு இறுதி ஒப்புதல் ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண்.7879/2012/எல்ஏ2 நாள் 19.04.2012
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1 நாள் 08.09.2017
3. அரசாணை எண்.79 / வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017
4. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019
5. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கை கடிதம் எண்.1227/2020 தம2 நாள் 16.06.2021
6. பதிவுத்துறை இணையவழி மதிப்பீடு அறிக்கை நாள். 19.08.2021
7. திருநாகேஸ்வரம் பேரூராட்சி தீர்மான எண். 35 நாள்.20.07.2021
8. திரு.க.வெங்கடேசன், த/பெ.கோ. கண்ணையன், குடியானத்தெரு திருநாகேஸ்வரம் அவர்களின் கடிதம் நாள்.17.08.2021
9. பாரத மாநில வங்கி, திருவிடைமருதூர் செலுத்துச்சீட்டு எண். 21/நாள்.23.08.2021.
10. இந்தியன் வங்கி, திருநாகேஸ்வரம் வரைவோலை எண். 138267/நாள்.23.08.2021 மற்றும் செ.சீ.எண்.255/24.08.2021.
11. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்

**************

உத்திரவு :-

தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட திருநாகேஸ்வரம் அணக்குடி கிராமம் நிலஅளவை எண். 130/3 இல் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் 39826.80 ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 20 வரையுள்ள மனைகளுக்கு பார்வை (1)இல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கை கடிதம் எண்.1227/2020/ தம2 நாள் 16.06.2021 இன்படி தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு மேற்படி ஆணையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தஞ்சாவூர் மண்டலம், நகர் ஊரமைப்பு துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடம் ம.வ/ந.ஊ.து.இ(த.ம)எண்.08/2021என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி பேரூராட்சி இறுதி ஒப்புதல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை (4) காணும் தனி அலுவலர் அவர்களின் தீர்மான எண். 35 நாள்.20.07.2021ன்படி மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்படி உத்தரவில் வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படி நிலப்பயன் மாற்றக் கட்டணம் மனை வழிகாட்டி மதிப்பில் 3 விழுக்காடு ரூ.4855/– பாரத மாநில வங்கி செலுத்துச்சீட்டு எண்.21 நாள் 23.08.2021 இன்படி செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய அனுமதி கட்டணங்கள் இவ்வலுவலக செலுத்துச்சீட்டு எண்.255 நாள் 24.08.2021 இன்படி செலுத்தப்பட்டுள்ளது. எனவே கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் உத்தரவில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் மேற்படி மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

S. Shanthi

<u>நிபந்தனைகள்</u>

1. நில உரிமம் குறித்து ஆவணங்களில் ஏதேனும் தவறுகளோ, வில்லங்க விவகாரமோ பின்னாளில் ஏற்படும் பட்சத்தில் இந்த மனைகள் ஒப்புதல் ஆணையானது, எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

2. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையின் கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

3. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவின் நுழைவு வாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவேண்டும்.

4. இந்த மனைப்பிரிவில் அமையும் நிலத்தின்மீது எவ்வித நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்க்கப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டம் மற்றும் நில சீர்திருத்தசட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும் மனுதாரரால் உறுதி மொழி பத்திரம் எழுதி கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு மேற்கண்ட நடவடிக்கை நிலத்தின் மீது எடுக்கப்படும் பட்சத்தில் இந்த இறுதி ஒப்புதல் ஆணையானது எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

5. மனைகள், இறுதி ஒப்புதல் செய்யப்பட்ட பிறகு நகர் ஊரமைப்புத்துறையின் அனுமதியின்றி மனைகளை மாற்றியமைக்கவோ அல்லது மனைகளை பிரித்து விற்பனை செய்யவோ கூடாது.

6. இந்த மனைப்பிரிவுகளின் இறுதி ஒப்புதல் தொடர்பான தணிக்கை துறையில் ஆட்சேபனை ஏதேனும் எழுப்பப்படின் அதற்கான தீர்வுகளையும் மற்றும் தொகையினையும் மனுதாரரே செலுத்த வேண்டும்.

7. பொதுமக்கள் உபயோகித்திற்காக பூங்கா அமைத்துக் கொள்ள வேண்டி நன்கொடை ஆவணத்தின்படி பத்திர பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ள பூங்கா பகுதியினை நான்குபுறமும் தடுத்து வேலி அமைத்து பூங்கா பகுதியென பெயர் பலகை நிறுவப்பட வேண்டும்

(I) மனுதாரர் அளித்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது. இப்பொருள் குறித்து மனுதாரரால் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் உண்மைக்கு புறம்பானது என்றோ, விதிமுறைகளை மீறியுள்ளது என்றோ பின்னிட்டு கண்டறியப்படின் இவ்வாணையினை மறு அறிவிப்பின்றி செயல் அலுவலரால் இரத்து செய்யப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

S. Shanthi

(II) இம்மனையில் கட்டிடம் கட்டப்படும் நேர்வில் இதற்குரிய கட்டிட உரிமம்/ அனுமதியினை உரிய கட்டணம் மற்றும் காலியிடவரி ஆகியவற்றை தனியே பேரூராட்சியில் செலுத்தி பெற்றுக்கொள்ள மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் தெருவிளக்கு அமைப்பதற்கு மின்சார வாரியத்தின் மதிப்பீட்டின் படியான தொகையினை மனைதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

திருநாகேஸ்வரம் பேரூராட்சி தஞ்சாவூர் மாவட்டம் 24 AUG 2021

செயல் அலுவலர்,
திருநாகேஸ்வரம் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

பெறுதல்

திரு. க.வெங்கடேசன், குடியானத்தெரு, திருநாகேஸ்வரம்.

நகல் : 1. நகர் ஊரமைப்பு துணை, இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம், 33 ராஜப்பா நகர் 4 வது தெரு, மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர்.

2. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், திருவிடைமருதூர்

S. Shanti



# our services doesn't just end there

### Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate